நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC/286/2025

வழக்கு சாட்சி : LW2 – PW1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்தானலெட்சுமி<br>தலைமைகாவலர் |
| கணவர் பெயர் | : | குமரேசன் |
| கிராமம் | : | திண்டுக்கல் |
| வயது | : | 40 / 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 04.**06.2026**

(எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,)

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் வெளிப்பாளையம் காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2025 ஆம் தேதி காலை 15.30 மணிக்கு வெளிப்பாளைய காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. கோகுல்ராஜ் அவர்களுடன் நானும், தலைமை காவலர் செல்வம் என்பவரும் வெளிப்பாளையம் காவல் சரகம் நாகப்பட்டினம் பேருந்து நிலையம் அருகே மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்த போது, அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க தனது பெயர் பானுமதி க /பெ. ரெங்கசாமி , 35 முத்துமாரியம்மன் கோவில் தெரு, வெளிப்பாளையம் என கூறினார். அவர் நின்றிருந்த இடத்தை சோதனை செய்த போது அங்கு சுமார் 90 Ml அளவுள்ள Directors Club என்ற பிராந்தி பாட்டில்கள் 100 எண்ணிக்கை வைத்திருந்தார். பின் மேற்படி நபரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 15.40 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் அன்றைய

தினமே 15.50 மணியளவில் மேற்படி தலைமை காவலர் செல்வம் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக மதுபாட்டில்களை கைப்பற்றினார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றைய தினமே 16.00 மணிக்கு தலைமை காவலர் செல்வம் மற்றும் என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் திரு. கோகுல்ராஜ் அவர்கள் தடயத்தை SEC 32 TNP Act ன்படி கொட்டி அழித்து அழிப்பு மகஜர் தயார் செய்தார். அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **அழிப்பு மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 16.30 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து, எதிரி மீது வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண். 32/2025, U/s.4(1) (C) TNP Amendment Act, 2024 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.